செய்தி வெளியீடு எண் : 1628 நாள் : 17.09.2022

**செய்தி வெளியீடு**

**<u>வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அருகே</u>**
**<u>பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டம்</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.09.2022 அன்று துவக்கி வைக்கி வைக்கும் விழா ஏற்பாடுகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் ஆய்வு**

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அருகே உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் 24.09.2022 அன்று பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பாக மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார். இதற்கான விழா ஏற்பாடுகளை இன்று (17.09.2022) மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு, அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த விழா ஏற்பாடுகள் குறித்து, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் ஒவ்வொரு துறையும், முதலிடத்தை நோக்கி வளர்ச்சி பெற்று வருகிறது. அந்த வகையில் வனத்துறை மூலம் 33% காடுகளின் பரப்பளவை உயர்த்திட ஈர நிலத்திட்டம் சிறப்பாக செயல்படுவது போல் பசுமை தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்டு, இன்னும் 10 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 32 கோடி மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டு முதல் கட்டமாக 2.50 கோடி மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன. இதனை வரும் 24.09.2022-ம் தேதி நடைபெறவுள்ள விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து மரக்கன்றுகள் நட்டு வைக்க உள்ளார். இந்த நிகழ்வில் 500 மரக்கன்றுகள் ஒரே இடத்தில்,

ஒரே நேரத்தில் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்படவுள்ளன. இவ்விழாவின் மூலம் தமிழ்நாட்டினை பசுமை மாநிலமாக மாற்றிட தொழில் முனைவோர், அரசுத் துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் உட்பட அனைவரையும் பங்கேற்க செய்து, மக்கள் இயக்கமாக தொடங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டாக வனத்துறை சிறப்பாக செயல்பட்டதன் எடுத்துக்காட்டாக, 13 ராம்சார் காடுகள் கண்டறியப்பட்டு, சர்வதேச அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், திரு.சீனிவாஸ் ரா ரெட்டி, இ.வ.ப., பசுமை தமிழ்நாடு இயக்கம், இயக்குநர் திரு. தீபக் ஸ்ரீவஸ்தவா, இ.வ.ப., துணை இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், திருமதி.ஆர்.காஞ்சனா, இ.வ.ப., கொளப்பாக்கம், மாநில வன ஆராய்ச்சி நிலைய துணை வனப்பாதுகாவலர், திரு.எஸ்.சண்முகம், கொளப்பாக்கம், மாநில வன ஆராய்ச்சி நிலைய வனச்சரக அலுவலர், திரு.ஆர்.ரகு ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in